விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 004 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 08 வெள்ளிக்கிழமை (23.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## ஜனாதிபதி - சம்பந்தன் சந்திப்பு
## உத்தியோகபூர்வமற்றது
### ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடனான சந்திப்பு உத்தியோகபூர்வமற்றது என ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கடற்றொழில் 11

## எதிர்வரும் திங்கள் விசேட அரச விடுமுறை

(கொழும்பு)

டிசம்பர் 26ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது. 11

அச்சுவேலியில்
## வன்முறைக் கும்பல் வீடு புகுந்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த வன்முறை கும்பல் ஒன்று வீட்டின் மீது தாக்குதல் மேற 11

கடற்றொழிலாளியின்
## கழுத்தில் கத்தி வைத்து மிரட்டிய இராணுவம்
### காரைநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகரில் கடற்றொழிலாளியின் கழுத்தில் கத்தியை வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலை அச்சுறுத்தல் 11

## நெருக்கடி நிலையில் நாடு
## மீட்க ஒன்றிணைவோம்



### ஜனாதிபதி ரணில் அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் வெறுமனே குறைகூறும் - விமர்சிக்கும் அரசியலை விடுத்து, நாட்டை மீட்க அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு
### வெளியானது சுற்றறிக்கை

(கொழும்பு)

2022ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு (போனஸ்) வழங்குவது தொடர்பாக இரண்டு சுற்றறிக்கைகள் 11

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, மாதகல் கடற்பகுதியில் 11

## மக்கள் பட்டினி கிடக்கும்போது நத்தார் கொண்டாட முடியாது
### பேராயர் கர்தினால் மல்கம்

(கொழும்பு)

மக்கள் பட்டினி கிடக்கும் போது இந்த வருடம் நத்தார் பண்டிகையை கொண்டாட முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 6.1 மில்லியன் மக்கள் 11

## பாடசாலைக்கு இன்று முதல் விடுமுறை

(கொழும்பு)

அரச மற்றும் அரச அனுசரணை தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் நேற்றுடன் நிறைவடைந்ததாக 11

## சிறுப்பிட்டி இளைஞன் கொழும்பில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கி நின்ற இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் இறப்பில் மர்மம் இருப்பதாக உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (4-7)


## 12 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்

(கரணவாய்)

வடக்கு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் 12

பூநகரிப் பகுதியில்
## பன்றிக்கு வைத்த பொறியில் சிக்கிய சிறுத்தைப் புலி

(கிளிநொச்சி)



பன்றிக்கு வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய சிறுத்தைப் புலியினை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடி பொருட்கள் மீட்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயபுரம் பகுதியில் மீன்பிடி வலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள் நேற்று வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது. மண்டைதீவு கடற்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பயன்படுத்தப்படாத மீன்பிடி வலைகளில் வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைக்கப் பெற்றது.

இந்நிலையில் அதிரடிப்படையின் உதவியுடன் குறித்த வெடி பொருட்கள் அகற்றப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

குறித்த வெடி பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4.7.104)

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**தேவராஜா வைகுந்தன்**

தென்னை பயிர்ச்செய்கை சபை
வட மாகாண பிராந்திய
முகாமையாளர் (யாழ். பிராந்திய
காரியாலயம் - பளை)

பொன் விழாக்காணும் எங்கள்
பண்பான முகாமையாளர்...
சேவையறிந்து நம் உத்தியோகத்தர்
நலனிலும் விவசாய மக்களோடும் ஏழை
மக்களோடும் இன்முகம் காட்டி சேவை
செய்யும் காவலர்.. தே. வைகுந்தன்...
பொன்விழா போற்றும் நாயகன்...

வாழ்த்துவோர்
வடமராட்சி தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர் மற்றும்
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(C-5585)

## 50 வது பிறந்ததின வாழ்த்துக்கள்



உயர்திரு. **தேவராஜா வைகுந்தன்**
(தென்னை பயிர்ச் செய்கை,
பிராந்திய முகாமையாளர்)

வாழ்த்துவோர்
தேசிய தமிழர் சக்தி (N.T.S)
(சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு)
தேசிய -லிபரல் சக்தி (அரசியல் பிரிவு)

(13870)

## 50 வது பிறந்ததின வாழ்த்துக்கள்



உயர்திரு. **தேவராஜா வைகுந்தன்**
(தென்னை பயிர்ச் செய்கை,
பிராந்திய முகாமையாளர்)

அனந்த காலங்களில் மக்களுடைய
துயர் துடைக்கின்ற மக்களோடு
மக்களாக அனைத்து மக்களுக்கான
வாழ்வாதாரங்களை உயர்த்தி நின்ற
மக்கள் சேவகனை நீடூழி காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஸ்கந்தவரோதயா - ஆன்மீக அறக்கட்டளை,
முருகண்டி சிவயோக சுவாமிகள் ஆன்மீக அறக்கட்டளை,
வடமராட்சி ஆன்மீக அறக்கட்டளை,
மட்டு. அம்பாள் அறக்கட்டளை

(13869)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி





அன்னை மடியில்
21.11.1957

**1957 - 2022**

ஆண்டவன் அடியில்
02.01.2022

திதி : அமாவாசை

கடந்த 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்
ஸ்ரீமான் **அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்** அவர்கள்
(சமூகப்பற்றாளர், இறைபணியாளன்) மண்டைதீவு - 01

அன்பே ! ஆருயிரே ! அருமை அப்பாவே!
ஆண்டவன் அடி சென்று ஆண்டொன்று வந்ததப்பா
பாதிவழியில் பரமனிடம் செல்வீர்கள்
என்று எதிர்பார்க்கவில்லையே அப்பா!
பெற்றோர் அணைப்பில் பேருவகை கண்டீர்களா?
பெறுதற்கரிய பெரும் பொக்கிஷமே!
பேரொடு வாழ்ந்தீர்கள் பெரும்புகழ் கண்டீர்கள்
நிலையில்லா உலகில் நிலையான சுகம்தேடி
சென்றீர்களா?
சென்ற இடத்தில் நித்தியசுகம் பெற்று
அமைதி பெற வேப்பந்திடல் முத்துமாரி அன்னையை
அனுதினமும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி வரும் மார்கழி மாதம் 08ஆம் நாள் 23.12.2022 இன்று முற்பகல் 10.30 மணியளவில் அமாவாசை திதியில் அன்னாரது இல்லத்தில் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் அதனை தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அறிவித்தலை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொண்டு
வருகைதருமாறு அன்புடன்
கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

இல. 12, 1ஆம் லேன்,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

நின் நினைவோடு வாழும்:
குடும்பத்தினர்

(13876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால்

# முறைப்பாடின்றி தலையிடத் தயார்

## மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)


**பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், முறைப்பாடு இன்றி தலையிடத் தயார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இலங்கை மனித உரிமைகள் பேரவையின் பணிப்பாளர் நிஹால் சந்திரசிறி இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே நிலவும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் ஒடுக்குவதற்கு அரசாங்கத்திற்கோ அல்லது அதன் பங்குதாரர்களுக்கோ உரிமை இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சக்தி அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

# சீனத்தூதுவர்-ஜனாதிபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஹு^வெய் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் கடன்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் சீன அரசாங்கம் மற்றும் சீன வங்கிகள் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்ததாகவும் சீனத்தூதரகம் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளது. (ரி)

# கடனுக்கான வட்டி வீதங்கள் நாட்டில் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான வணிக வங்கிகள் வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் உய ர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் வட்டி விகிதங்கள் 15% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் வட்டி அதிகரிப்பு கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக வும் தேசிய சேமிப்பு வங்கி தெரிவித்துள்ளது.

இந்த வட்டி உயர்வு நிலையான வட்டி விகிதத்தில் எடுக்கப்பட்ட கடன்களுக்கும் பொருந்தும் எனவும் தெரிவித்துள்ளது. (ரி)

### நடப்பாண்டில் இதுவரை 72,903 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

58 பிரிவுகளை அதிக ஆபத்துள்ள வலயங்களாக அடையாளப்படுத்தியுள்ளதாகவும் குறித்த பிரிவு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 72 ஆயிரத்து 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

# வாகன விபத்துக்களால் நாளாந்தம் 8 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்கள் காரணமாக ஆயிரத்து 971 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்தின் கல்வி மற்றும் பொது பாதுகாப்பு நிலைய கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் சேனக கமகே இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் வாகன விபத்துக்கள் காரணமாக குறைந்தது 8 பேர் உயிரிழப்பதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)


தென்னாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும்
தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும்
இணைந்து நடாத்தும்

மார்கழிப் பெருவிழா - 2022

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழி பாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **“அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே”** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்
(1.30 மணி முதல் 5.30 மணி வரை)

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **“எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்”** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு.**எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வனராஜ் சசிராஜ்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”
திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111

(C-5579)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்

# ஜொலிஸ்ரார், சென்றலைட்ஸ் இறுதிப்போட்டிக்கு தெரிவு




மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் 3 ஆவது தடவையாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது அரையிறுதி போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜொலிஸ்ரார் அணி, AB அணியை 10 விக் கெட்டுகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி களத்தடுப்பை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத் தாடிய AB அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழ ந்து 151 ஓட்டங்களை பெற்றது.

லிங்கநாதன்-32, ஒசனாந்த சர்மா -28, உத்தமன்-34 ஓட்ட ங்களைப் பெற்றனர். பந்து வீச் சில் ஜொலிஸ்ரார் அணிசார்பாக உத்தமன், சிந்துஜன் தலா 2 விக்கெட்டினையும், ரவீந்திரன், கோபி தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 14.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 152 ஓட்டங்களைப் பெற்றது. மதூஸன் ஆட்டமிழக்காது 83, சோமியின்தன் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இது ஓர் சாதனையாக அமைகின்றது.

இப்போட்டியின் சிறந்த வீரராக ஜொலிஸ்ரார் அணியைச் சார்ந்த மதூஸன் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் சென்றலைட் அணி, விக்டோறியா அணியை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற விக்டோறியா அணி களத் தடுப்பை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ற லைட்ஸ் அணி 24 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பிரியலக்ஸன் -18, ஜனோசன் -15, இயவரசன் -13, ஜெரிக் -19, இந்துயன் -22, ஜெயதர்சன் ஆட்டமிழக்காது -18 ஓட்டங்களையும் ஜெம்ஸ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோறிய அணியைச் சேர்ந்த சிந்துஜன் -2, கதியோன் -2, பத்மபிரியன், சரத்குமார், வேணுதாஸ் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்டேறியா அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. சிந்து -58, கதியோன் -47 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் இன்துயன்- 5, இயவரசன் -3, ஜெம்ஸ் 1 விக் கெட்டினைக் கைப்பற்றியுள்ளனர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக சென்றலைட் அணியைச் சார்ந்த இன்துஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4)




50 வது பிறந்ததின வாழ்த்துக்கள்

தாவடி வடக்கு கற்பகத்தரு சங்கத்தின் ஸ்தாபகர் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர்

தே.வைகுந்தன்

ஐயா அவர்களை வாழ்த்துகின்றோம்

தாவடி வடக்கு கற்பகத்தரு சங்கம் தாவடி வடக்கு.

(13868)



50 வது பிறந்ததின வாழ்த்துக்கள்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர்

தே.வைகுந்தன்

வாழ்த்துவோர்:

உடுவில் வடக்கு மகளிர் வாழ்வாதார தையல் பயிற்சி நிலையம் - உடுவில்

(13867)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020
- மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020

மேற்படி பரீட்சைகளினை 07.01.2023 (சனிக்கிழமை) தொடக்கம் 22.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 02.01.2023 (திங்கட்கிழமை) தொடக்கம் 05.01.2023 (வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை www.codl.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியினூடாகவோ அல்லது 021 - 222 - 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
22.12.2022

(C-5584)

# மரண அறிவித்தல்

## கந்தன் சின்னராசா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் சின்னராசா அவர்கள் கடந்த 20.12.2022 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - வியாழி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் பாசமிகு கணவரும் சின்னப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற சின்னையா, அருந்ததி இலட்சுமி, பாக்கியம், பவளம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கந்தசாமி, கந்தையா, தவமணி, மகேஸ்வரி, கமலபூபதி மற்றும் காலஞ் சென்ற நடேசு, திருநாவுக்கரசு, அருளன், சின்னத்துரை, பூமணி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்கந்தராசா (பிரான்ஸ்), ரமணராசா (சிரேஷ்ட விரிவுரையாளர் - இந்து நாகரிகத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), கிருஷ்ணவதனா (பிரான்ஸ்), ராகுலன் (சமுர்த்தி உத்தியோகத்தர் - சாவகச்சேரி பிரதேச செயலகம்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் பத்மலோஜினி (பிரான்ஸ்), தனுசுயா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - வலி.கிழக்கு பிரதேச சபை), ரமேஷ் (பிரான்ஸ்), மஞ்சுகா (ஆசிரியை - புங்குடுதீவு அ.மெ.த.க. பாடசாலை) ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஈழவன், சந்தோஷ், இமையாள், கம்சவி, இமைவிழி, சகானா, கவினயன், லக்ஷாயகி, சஜீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2022) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பளை.

தகவல்: குடும்பத்தினர்
077 735 2174

(C-5585)

# ஈர விழிகளுடன் ஈராண்டில்...



பார் போற்ற 01 . 12 . 1945

பார் ஏங்க 13 . 01 . 2021

அமரர்

## சின்னத்துரை குமரவேல் (J.P)

( ஓய்வு பெற்ற நூலகர் - பொது நூலகம், சுன்னாகம்,
முன்னாள் தலைவர் - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம்,
விவாகப் பதிவாளர் - வலிகாமம் வடக்குப் பிரிவு)

திதி: அமாவாசை (23.12.2022)

எம் வீட்டின் மகா விருட்சம்
சாய்ந்து சருகானதுவே
எம் வீடும் வெறிச்சதுவே
வெற்றிடமாய் ஆனதுவே!

கூடி வாழ்ந்த நாட்கள் - எம்
மனக்கண்முன் தோன்றுதப்பா
ஈர விழிகளுடன்
ஈராண்டில் நாம்.....

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

(13880)

“திருவோணம்”
முத்துக்கிருஷ்ணர் வீதி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 50 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர்

திரு. தேவராஜா வைகுந்தன்

நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்

இராமநாதபுரம் கப்புறுக்க சங்கம்,
விளக்குமாறு, தும்புத்தடி,
மெழுகுவர்த்தி செய்வோர்.

(C-5580)


# இலங்கையின் பணவீக்கம் 65% ஆக குறைந்தது

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 65% ஆக குறைவடைந்துள்ளது என தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபரில், தேசிய நுகர் வோர் விலைக் குறியீடு 70.6% ஆக பதிவாகி இருந்தது. மேலும் அந்த மாதத்தில் 80.9% ஆக இருந்த நாட்டின் உணவுப் பணவீக்கம் நவம்பரில் 69.8% ஆகக் குறைந்துள்ளது.(நி)


# வாழ்த்துகின்றோம்



வடமாகாண இலங்கைச் சாரணிய சங்கத்தில் சிரேஷ்ட சாரணிய பிரிவின் உயரிய விருதான பிரதம மந்திரி விருதைப் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவிகளான செல்வி பெலினி, செல்வி கோபிகா, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பழைய மாணவி செல்வி மிசேல், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி செல்வி குழலினி ஆகியோரை வடமாகாண பெண் சாரணிய சங்கம் வாழ்த்துகின்றது. இவர்களைப் பயிற்றுவித்த திருமதி.நீலா தர்மகுலசிங்கம், திருமதி.கிருபாசக்தி சிவராஜா அவர்களுக்கு எம் நன்றிகள்.

(13864) சாரணியர் சங்கம்


"சிவனே சிவனே என்று ஓலம் இடினும் உணராய் உணராயோ"!
மண்ணவர்களும் விண்ணவர்களும் மகிழ்ந்து வணங்கும் புண்ணியதலம்

# காரைநகர் ஈழத்து சிதம்பரம்



"ஓம் நமசிவாய"

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்த புராதனபதி இதுவாகும். வேண்டத்தக்கது எதுவென அவன் அறிந்து வேண்ட முழுதும் தரும் அற்புதக்கூத்தன், ஆனந்தக் கூத்தன், திண்ணபுரத்துச் சிவன், இலங்கை வாழ் பக்த கோடிகளுக்கு வரமீயும் படியாக தினம் தினம் காத்திருக் கின்றான். காரைநகர் வாழ் மக்களை சந்ததி சந்ததியாக எந்தவித குறையுமின்றி, தன் நெஞ்சிலிருத்தி பொன்போல பேறாக்கி, உலகில் வாழும் அனைவரையும் முதன்மையாக்கி, இலங்கையின் சிகரமென இத்தீவக மண்ணை தித்திக்க வைத்து திருவாசக வாழ்வாக்கிய இவ்வேளை எந்நாட்டவர்க்கும் திண்ணபுரத்தான் திருவருள் பாலிக்க அருள் கொழிக்கும் காலமாகும். இதனையொற்றியே, கார்த்திகையின் காரைநகர் களைகட்டி, மார்கழியில் கர்ரைமண் தலை எடுத்து சூழும் தளைநீக்கி அல்லல் அறுக்கும் ஆனந்த வாழ்வை ஆண்டுதோறும் பிரகடனத்துமாப்போல நல்ல வரவாக்கி வருகிறது.

இதற்காகவே, திண்ணபுரத்து அரசை நைந்து நைந்து, நெக்கு நெக்கு, உருகி உருகி அடியார்கள் தவமாகின்றார்கள். நித்திய, நைமித்திய பூஜையில் வரமாகும். ஆலயங்கள் ஆகம நெறி தவறுமாயின் அது வீட்டிற்கும் நாட்டிற்கும் சந்ததிக்கும் ஆபத்தானதாகவே அமையும் என்பது ஆன்றோர் வாக்காகும்.

அல்லும் பகலும், சொல்லும் படியாக வாயூற வாழ்த்தி ஈழத்து சிதம்பரத்தானை உடம்பு முழுவதுமாக பாசமாக்கி அவனையே தேசமாக்கி, அவனையே சுவாசமாக்கி மார்கழி திருவாதிரையையே அந்த மாதமெல்லாம் கொலுவாங்கி, பஞ்சரத பவனிக்காய் நெஞ்சமதை மஞ்சமாக்கிய நாம், அந்தப் பெருமானுக்கு எந்தவித இடையூறும் இன்றி வழமைபோல மார்கழிப் பெருவிழா நடைபெற அவன் அருளாலே.

"பாடிப்பணிவோம் பரமனை"



"கூடியும் நின்றும் தொழுதும் இறை
வனைப் பாடி உளே நின்று பாதம் பணிமின்கள்
ஆடி உளே நின்று அறிவு செய்வார்கட்கு
நீடிய ஈற்றுப் பசு அதுவாமே"

திருமூலர் திருமந்திரம் -2109

கூட்டமாக அடியார்களுடன் சேர்ந்து நின்றும், தனியாகவும் கூட, இறைவனை சந்நிதியில் பிற வார்த்தை பேசாது தொழுது பணியுங்கள் பாடி பாமலர் தூவி இறைவன் திருவடிகளை பணிந்து வணங்குங்கள். அவன் அருள்பெறும் மகிழ்ச்சியிலே உள்ளம் துள்ளிக்குதிக்க ஆனந்தக்கூத்தாடி அகம் குழைந்து அன்பு செலுத்தி தியானித்திருப்ப வர்களுக்கு, நெடுநாளைக்கு கன்றீன்ற பசு பொழியும் பாலைப்போல இறையருள் தடையின்றிக் கிடைத்துக்கொண்டேயிருக்கும்.

"ஓம் நமசிவாய"

கண்ணினால் உமைக்காணத்திண்ண மாகத்திண்ண புரத்தானே
கண்ணைத்துயின்று அவமே காலத்தை போக்காத மண்ணுக்காய்
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக் கோமானை மார்கழி முழுவதும்
எண்ணி எண்ணி எச்சங்கடமும் இன்றி திண்ணமென சிக்கெனப்பிடித்து
கண்குளிரக் கண்டின் புறத் திண்ணபுரத்தானே அருள்செய்மின்
"ஓம் நமசிவாய"

"ஏலக்குழலி பரிசு ஏலோர் எம்பாவாய்"



க.கு.க.சிவபாலன் (K.K.K),
போசகர் காரைநகர் ஈழத்துச்சிதம்பரம்
மாணிக்கவாசகர் திண்ணபுரம் மடாலயம்.

(C-5581)

# இராசிபலன்

23.12.2022
மார்கழி 08, வெள்ளிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 4.32 மணிவரை

மூலம் பின்னிரவு 2.52 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம் ரோகினி

வளவன்


மேஷம்


வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.


கடகம்


உறவினர் வருகையால் உற்சாகம் கூடும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


துலாம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


மகரம்

குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும்.


ரிஷபம்


குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.


சிம்மம்


புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், பிரபலமான்வர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்


குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.


கன்னி

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.


தனுசு

திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.



மீனம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு; வன்முறையை தவிருங்கள்

## கலாநிதி-ஆறு-திருமுருகன் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதால் விபத்துக்களில் சிக்காமலும் வன்முறைகளில் ஈடுபடாமலும் இளைஞர்கள் இருக்க வேண்டுமென சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

கனேடியத் தமிழர்கள் 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கினர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில் இளைஞர்கள் விபத்துக்களில் சிக்கல், வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடல் போன்றவற்றால் தேவையற்ற நெருக்கடி ஏற்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் காகிதத் தட்டுப்பாடு ஏற்படும். இவ்வாறான நேரத்தில் புலம்பெயர் தேசத்தவர்கள் நீங்கள் படித்த பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு முன் வர வேண்டும். குளிரூட்டி, நவீன சாதனங்கள் வழங்குவது என்பது ஒரு பக்கம் இருக்க அடிப்படை விடயமான கல்வியில் நாம் கரிசனை கொள்ள வேண்டும். இலவச பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் திண்டாடும் போது அடிப்படை கல்விக்கான புத்தகங்கள், கொப்பிகளை வாங்குவதற்கு புலம்பெயர் தேசத்தவர்கள் உதவ வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-33-104)

# அட்டைப் பண்ணை விவகாரம் வடக்கு ஆளுநருக்கு மகஜர்

(அராலி)

கடலட்டைப் பண்ணையால் கடற்றொழில் பாதிக்கப்படுகிறது என தெரிவித்து அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தினர் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் சார்பில் நேற்று வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கையளித்தார். (4-6-104)

# இலவச உரம் பெறாதவர்கள் விரைவில் பெற்றுக் கொள்ளுங்கள்

## கைதடி கமக்கார அமைப்புக்கள்

(சாவகச்சேரி)

பெரும்போக நெற்செய்கைக்கான இலவச உரம் பெறத் தகுதியிருந்தும் இதுவரை பெறாத விவசாயிகள் உடனடியாக அதனை பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் உரங்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் கைதடி கமநல சேவை நிலைய எல்லைப் பரப்பிற்குட்பட்ட கமக்கார அமைப்புக்கள் தெரியப்படுத்தியுள்ளன.


60 பரப்பிற்கு உட்பட்ட அரசாங்க உத்தியோகம் இல்லாத விவசாயிகள் மற்றும் 41,500 ரூபாய்க்கு உட்பட்ட சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் குறித்த இலவச உரம் பெறத் தகுதியானவர்களாக அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் இன்னமும் சிலர் தகுதியிருந்தும் இலவச உரத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லை. விவசாயிகளால் பெறப்படாத இலவச உரங்களை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

எனவே தகுதியுடைய விவசாயிகள் குடும்ப அட்டை உடன் கைதடி கமநல சேவை நிலையம் சென்று இலவச உரத்தினை பெற முடியும். அத்துடன் 41,500 ரூபாய்க்கு உட்பட்ட வேதனம் பெறும் அரச உத்தியோக நெற் செய்கையாளர்களும் சம்பளப்பட்டியலை காண்பித்து இலவச உரத்தினைப் பெறமுடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு சேதன திரவ உரம் வழங்கப்படுவதாகவும் செய்கையாளர்கள் அதனையும் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# பெயர்ப்பலகை சேதம் பொலிஸில் முறைப்பாடு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையால் அண்மையில் நாட்டப்பட்ட வீதிப் பெயர்ப்பலகைகளில் சிங்கள மொழிக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக பிரதேச சபையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம் பகுதியில் புதிதாக நாட்டப்பட்ட வீதிப் பெயர்ப்பலகைகள் சிலவற்றில் சிங்கள மொழிக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர் கருத்து தெரிவிக்கையில்தேசிய கொள்கைகள் மற்றும் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி மூன்று மொழிகளிலும் வீதிப் பெயர் காட்சிப் படுத்தப்பட்டுள்ள போதிலும் சில இடங்களில் சிங்கள மொழி பெயர்ப்பலகைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். (4-6-30)



இலங்கைப் பெண் சாரணிய மன்றத்தினால் கடந்த 10 ஆம் திகதி நடத்தப்பட்ட தேசிய வருடாந்த கூட்டத்தில் சிறந்த சாதனைக்கான விருதினை யாழ்.மாவட்ட பெண் சாரணிய ஆணையாளர் திருமதி.நீலா தர்மகுலசிங்கம் பெற்றுக் கொண்டார்.

# சவுக்கு மர கொள்வனவில் பொதுமக்கள் ஆர்வம்



(அராலி)

யாழ். நாகர்கோவில் மற்றும் மணல் காடு ஆகிய பகுதிகளில் சவுக்கு மரக்கிளையின் வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

கிறிஸ்தவ மக்களின் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட கொண்டாட்டம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் வீடுகள் மற்றும் பொது இடங்களை அலங்கரிப்பதற்கு இந்தச் சவுக்கு மரக்கிளைகளை மக்கள் கொள்வனவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக இந்தச் சவுக்கு மரக்கிளைகள் யாழ். மரியன்னை தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதிகளிலும் புனித பற்றிக்ஸ் கல்லூரி அருகாமையிலும் வெகுவாக விற்பனை செய்யப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போது வியாபாரிகள் சவுக்கு மரக்கிளைகளை 500 தொடக்கம் 800 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். (4-6-104)

# பெண்ணின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடமியன் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் பெண் ஒருவரின் ஒரு பவுண் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# நினைவு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டில் பேராசிரியர் க. கைலாசபதியின் 40 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. (4-6)



யாழ்ப்பாணம் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்று காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமைக்கான கௌரவிப்புவிழா யாழ்.மாவட்ட செயலக கணக்காளரும் நலன்புரிக் கழகத்தின் தலைவருமான அ.நிர்மல் தலைமையில் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)




கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.
(படம்- சப்தசங்கரி)

# தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெறும். (4-6)

## 50 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்



### தேவராஜா வைகுந்தன்

(கிளிநொச்சி மாவட்ட பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கை சபை)

பொன் விழாக் காணும் நாயகனை பல்லாண்டு
காலம் வாழ வேண்டும் என வாழ்த்துவதோடு
அவரது அர்ப்பணிப்பான சேவை மக்களோடு
தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

Happy Birthday

(சீ-5578)

கரைச்சி பிரதேச கப்புறுக்க சங்கங்கள்

## இந்தியத் துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்

EMBASSY OF INDIA

## காணி தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகமானது, தூதரகத்திற்கான அலுவலக கட்டடத்தை அமைப்பதற்காக மற்றும் உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் பொருத்தமான காணியை தேடுகிறது. காணிக்கான குறைந்தபட்ச நில அளவானது 1 ஏக்கர் (16 பரப்பு/160 பேர்ச்) ஆகும். காணியானது பிரதான சாலையில் அதிகபட்ச முகப்பை கொண்டதாக இருக்க வேண்டும். மற்றும் காணி தொடர்பில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் இருக்க வேண்டும். குறிப்பாக சட்டப்பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் அற்ற தனிப்பட்ட சொத்தாக இருக்க வேண்டும். ஆர்வமுள்ள தரப்பினர் அல்லது தனி நபர்கள் தங்கள் முன்மொழிவை காணி தொடர்பான முழு விபரங்களுடன் எதிர்பார்க்கும் விலையுடன் பின்வரும் முகவரிக்கு பாதுகாப்பாக மூடப்பட்ட உறையில் அனுப்பவும்.

**தலைமை நிர்வாக அதிகாரி,**
**இந்தியத் துணைத் தூதரகம்,**
**இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்:+94-21-2220504 &2220505**
**மின்னஞ்சல் முகவரி:** hoc.jaffna@mea.gov.in

(சீ-5577)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா:60 சூரி 12 செவ் 11 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:A/L ,Chef (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13208

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா:30 சூரி 10 செவ் 3 இல்
உயரம்:5'6"
தகைமை/ தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர் (அரச)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13209

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 80 ½ சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்: Hotel Management (அரச தொழில்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13210

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: சூரி 5செவ் 9 இல்
உயரம்:172 cm
தகைமை/ தொழில்:O/L(தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: படித்த தொழில் புரியும் பெண்
தொ.இ: B/13212

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 28 சூரி 10 செவ் 8
தகைமை/தொழில்:விவசாய போதனாசிரியர்
எதிர்பார்ப்பு:அரச தொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/13220

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 42 சூரி 8 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்:A/L பாடசாலை அலுவலகர் (அரச)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13223

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 3
கி.பா:63 சூரி 6 செவ் 8 இல்
உயரம்:5'4"
தகைமை/ தொழில்:BA பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:உயர்பதவி/ லண்டன் கனடா
தொ.இ: G/13232

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: சூரி 3 செவ் 4 இல்
உயரம்:157cm
தகைமை/ தொழில்: A/L
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ: G/13235

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

## 50 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



Happy Birthday

### தேவராஜா வைகுந்தன்

பிராந்திய முகாமையாளர்
தென்னை பயிர்ச்செய்கை சபை- யாழ்ப்பாணம்

உம்மோடு பயணிக்கும் ஒவ்வொரு நாளும்
உம் அருகே அழகாய் தொலைத்தோமே
எம்மோடு உரையாடும் நாம் கண்ட உறவே
எந்நாளும் இல்லாத பெருமிதம் கொள்வோம்

உம் இதழ்கள் சிரிக்கும் அழகு என்றும்
எம் மனதில் நிற்கும் உம் அழகிய முகம்
உதித்த இந் நாள் அது உம் இனிய பிறந்தநாளே

(13862)

வாழ்த்துவோர்-
அக்கராயன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 57





பழுவேட்டரையர் வந்திருந்தார்; அவருடைய இளம் மனையாளும் வந்திருந்தாள். அப்பப்பா! அந்த பெண்ணின் அழகை என்ன வென்று சொல்வது?

"நீ பார்த்தாயா என்ன?"

"ஆமாம், பார்க்காமலா? என் நண்பன் கந்தமாறன் என்னை அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றான்; அங்கே பார்த்தேன். அவ்வளவு ஸ்திரீகளிலும் பழுவேட்டரையரின் இளையராணி தான் பிரமாத அழகுடன் விளங்கினாள்! மற்ற கருநிறத்து மங்கையர்க்கு நடுவில் அந்த ராணியின் முகம் பூரண சந்திரனைப் போல் பொலிந்தது. அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இந்திராணி, சந்திராணி எல்லோரும் அவளுக்கு அப்புறந்தான்!"

"அடேயப்பா! ஒரேயடியாக வர்ணிக்கிறாயே? பிறகு என்ன நடந்தது? குரவைக் கூத்து நடந்ததா?"

"நடந்தது, மிகவும் நன்றாயிருந்தது. அப்போது உம்மை நினைத்துக் கொண்டேன்."

"எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அப்புறம் இன்னும் என்ன நடந்தது?"

"வேலனாட்டம் நடந்தது. தேவராளனும் தேவராட்டியும் மேடைக்கு வந்து ஆவேசமாக ஆடினார்கள்."

"சந்நதம் வந்ததா? ஏதாவது வாக்குச் சொன்னார்களா?"

"ஆகா! நினைத்த காரியம் கைக்கூடும்; மழை பெய்யும்; நிலம் விளையும்" என்றெல்லாம் சந்நதக்காரன் சொன்னான்"

"அவ்வளவுதானா?"

"இன்னும் ஏதோ இராஜாங்க விடயமாகச் சொன்னான்; நான் அதையொன்றும் கவனிக்கவில்லை."

"அடடா! இவ்வளவுதானா? கவனித்திருக்க வேண்டும், தம்பி! நீ இளம்பிள்ளை; நல்ல வீர பராக்கிரம் உடையவனாய்த் தோன்றுகிறாய். இராஜாங்க விடயங்களைப் பற்றி எங்கேயாவது யாராவது பேசினால் காதில் கேட்டு வைத்துக் கொள்ள வேண்டும்."

"நீர் சொல்வது உண்மை. எனக்குக் கூட இன்று காலையில் அப்படித் தான் தோன்றியது."

"காலையில் தோன்றுவானேன்?"

"காலையில் கந்தமாறனும் நானும் பேசிக்கொண்டே கொள்ளிடக்கரை வரையில் வந்தோம். இராத்திரி நான் படுத்துத் தூங்கிய பிறகு, கடம்பூர் மாளிகைக்கு வந்திருந்த விருந்தாளிகள் கூட்டம் போட்டு ஏதேதோ இராஜாங்க விடயமாகப் பேசினார்களாம்."

"என்ன பேசினார்களாம்?"

"அது எனக்குத் தெரியாது; கந்தமாறன் ஏடாகூடமாகச் சொன்னானே தவிர, தெளிவாகச் சொல்லவில்லை, ஏதோ ஒரு காரியம் சீக்கிரம் நடக்கப் போகிறது.

அப்போது சொல்கிறேன் என்றான். அவன் பேச்சே மர்மமாயிருந்தது. ஏன், சுவாமிகளே! உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எதைப் பற்றி?"

"நாடு நகரமெல்லாம் ஏதேதோ பேசிக் கொள்கிறார்களே? வானத்தில் வால் நட்சத்திரம் காணப்படுகிறது; இராஜாங்கத்துக்கு ஏதோ ஆபத்து இருக்கிறது; சோழ சிம்மாசனத்தில் மாறுதல் ஏற்படும்; அப்படி, இப்படி என்றெல்லாம் பேசிக்கொள்கிறார்கள். தொண்டை மண்டலம் வரையில் இந்தப் பேச்சு எட்டியிருக்கிறது.

இன்னும் யார் யாரோ பெரிய கைகள் சேர்ந்து, அடிக்கடி கூடி, அடுத்த பட்டத்துக்கு யார் என்று யோசித்து வருகிறார்களாம். உங்களுக்கு என்ன தோன்றுகிறது? "அடுத்த பட்டத்துக்கு யார் வரக்கூடும்?"

(தொடரும்....)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

## தூங்கும் ஆறு



நேற்றைய தொடர்ச்சி)

"சிஷ்யர்களே! ஆறு தூங்கினால்தான் நாம் ஆற்றில் இறங்க முடியும். அதுவரை காத்திருப்போம். நாம் காத்திருப்பது ஆற்றுக்குத் தெரியாமல் இருப்பது ம்க்கியம். தெரிந்தால் அது தூக்கவே தூங்காது" என்று எச்சரித்தார் குரு.

"இப்போது என்ன செய்வது?" என்று மட்டி கேட்டு முடிப்பதற்கு முன், மடையன் தன் எண்ணத்தை வெளியிட்டான்.

"இந்த ஆற்றங்கரையிலே... அதோ அடர்த்தியான ஒரு சோலை இருக்கிறதே... அங்கே போய் பதுங்கியிருப்போம்"

"அதுதான் சரி" என்று இருள் சூழ்ந்திருந்த அந்தச் சோலைக்கு எல்லோரும் சென்றார்கள்.

**தோல் இருக்கச் சுளை விழுங்கி**

அங்கே சென்றதும் அவர்கள் அந்த ஆற்றைப் பற்றித் தாங்கள் அறிந்ததையும் கேள்விப் பட்டதையும் கதை கதையாகப் பேசிக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் ஆச்சரியத்தோடும் அச்சத்தோடும் அந்தப் பொல்லாத நதி மற்றவர்க்கு ஏற்படுத்திய பொல்லாங்கையெல்லாம் சொல்லிச் சொல்லித் தங்களை உசார்ப்படுத்திக் கொண்டார்கள். கேட்டு குருநாதரே மனத்தில் திகில் அடைந்து விட்டார்.

"குருதேவா! இந்த ஆறு எப்படிப்பட்டது என்பதை என் தாத்தா ஒரு பெரிய வியாபாரி. எனக்கு அவர் சொன்னதெல்லாம் அப்படியே நினைவு இருக்கிறது" என்று மட்டி ஆரம்பித்தான்.

"என் தாத்தா ஒரு பெரிய வியாபாரி. அவர் உப்பு வியாபாரம் செய்து வந்தார். ஒரு சமயம் அவர் இரண்டு கழுதைகளின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு இந்த ஆற்றைக் கடந்து அந்தப் பக்கம் போக தண்ணீரில் இங்கினார். அவரோடு வியாபாரத்துக்குச் சென்ற அவரது கூட்டாளி ஒருவருடன் ஆற்றில் இறங்கினார்.

நடு ஆற்றில் வந்த போது, தண்ணீர் குளுகுளுவென்று இருந்தால் அவர்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அது மிகவும் வெப்பமான கோடை காலம். நீண்ட தூரம் வெயிலில் வந்தால் அந்தச் சூடு தணிய தாங்களும் தங்கள் கழுதைகளும் சுகமாகக் குளிக்கலாமே என்று எண்ணினார்கள்.

ஆற்றிலே தங்கள் உடல்களையும் கழுவிக் கொண்டார்கள். தங்கள் கழுதைகளையும் குளிப்பாட்டினார்கள். அந்த வெயில் காலத்துக்கு மிகவும் இதமாக இருந்தது அவர்களுக்கு. அதற்கப்புறம் தான் அவர்களுக்கு இந்த நதி எவ்வளவு பொல்லாதது என்ற விடயமே புரிந்தது. அக்கரைக்குப் போய்ப் பார்த்தால் அவர்களுக்கு ஒரே அதிர்ச்சியாகிவிட்டது. அதை நினைத்தால் எனக்கு இப்போதும் அதிர்ச்சியாகவும் இருக்கிறது, பயமாகவும் இருக்கிறது" என்று மூச்சு வாங்கச் சற்று நிறுத்தினான் மட்டி.

"என்ன... என்ன நடந்தது அப்படி?" என்று மற்ற சிஷ்யர்களும் அவர்களுக்கு முந்தி குருநாதரும் பரபரப்பாகக் கேட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
–ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொல்வின் ஆர். டி சில்வா கூறிய தத்துவத்தை சம்பந்தர் அறிய வேண்டும்

ஒரு மொழி என்றால் இரு நாடு. இரு மொழி என்றால் ஒரு நாடு என்பது கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா கூறிய தத்துவம்.

சிங்களம் மட்டுமே இந்த நாட்டின் ஒரே மொழி என்றால் இலங்கை இரண்டு நாடுகளாகும்.

மாறாக இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் என்றால், இலங்கை ஒரு நாடாக இருக்கும்.

அமரர் கொல்வின் ஆர்.டி சில்வா கூறிய மேற்போந்த தத்துவம் எத்துணை நிதர்சனமானது என்பதை இப்போது அனைவரும் உணர்ந்திருப்பர்.

இவை ஒருபுறமிருக்க, இந்தத் தத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் ஒரு கணம் மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

அதாவது இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் நேற்று முன்தினம் (21) சந்தித்துப் பேசியுள்ளனர்.

இங்குதான் கொல்வின் ஆர்.டி சில்வா கூறிய தத்துவத்தைத் தொடுத்தும் இணைத்தும் பார்க்க வேண்டியுள்ளது.

ஆம், இனப் பிரச்சினைக்கான தீர்வில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் பங்கேற்று ஒரு முடிவுக்கு வரும்போது அதனைத் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்வர்.

மாறாக இரா.சம்பந்தர், எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவர் மட்டும் ஆட்சித் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கான தீர்வாக எதை முன்வைத்தாலும் அஃது தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

தவிர, குறித்த தீர்வு தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைப்பர் என்பது தெரிந்த விடயம்.

ஏலவே, நிபந்தனையின்றி தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் பேசுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகத்தனம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தநிலையில் இரா.சம்பந்தரும் எம்.ஏ. சுமந்திரனும் பேச்சுவார்த்தையில் தனித்துப் பங்கேற்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை கடினப்படுத்தவே செய்யும்.

அதேநேரம் இந்த விடயம் மேற்குறித்த இரண்டு தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியாததும் அல்ல.

அப்படி இருந்தும் அவர்கள் தனித்துப் பேச்சுவார்த்தைக்குப் போகிறார்கள் எனில், இனப் பிரச்சினைக்கான தீர்வை ஏனைய தமிழ் அரசியல் தரப்புகள் குழப்பியதாக ஒரு காட்சி காட்டப்படுவதற்கான ஏற்பாடாக இது உருவெடுக்கப் போகிறதோ என்ற சந்தேகமும் அதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வியூகத்தை அமைத்தாரா என்ற ஊகங்களும் தமிழ் மக்கள் மத்தியில் பேசுபடு பொருளாகியுள்ளன.

எனவே தமிழ் மக்களுக்கான தீர்வை – தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை தமிழ்த் தரப்பில் ஒருவர் இருவர் தம்மாலானதாக காட்ட முற்பட்டால், அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும்.

இரா.சம்பந்தரின் இறுதிக் கால அரசியல் அவருக்கு அவமரியாதையை ஏற்படுத்துவதாகவும் அமையும்.

# வவுனியாவில் மடிச்சுக்கட்டி தாக்கத்தால் 782 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் மடிச்சுக்கட்டி நோய் தாக்கம் காரணமாக 782 ஏக்கர் நெற் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் நெல் மற்றும் பயிர் பாதுகாப்பு பாடவிதான உத்தியோகத்தர் கு.கஜரூபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நெற்செய்கை மாவட்டங்களில் வவுனியா மாவட்டமும் முன்னிலை வகிக்கின்றது. இம்முறை காலபோகத்தில் 23 ஆயிரத்து 186 ஹெக்டேயர் நெற்செய்கை எதிர்பார்க்கப்பட்ட போதும் ஆரம்பத்தில் போதியளவு மழை கிடைக்காமையால் 21 ஆயிரத்து 832 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் ஆரம்பத்தில் குறைவான மழை வீழ்ச்சி கிடைத்ததுடன், தற்போது அதிகளவிலான மழை வீழ்ச்சி கிடைத்து வருகின்றது.

வானிலை மாற்றத்தினால் குறைந்தளவிலான பகல் காலமான, இருளான அதிக ஈரப்பதன் காலநிலை நிலவி வருவதால் நெற் செய்கை பயிர்களுக்கு இலை மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் பலர் பாதிப்படைந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், பாவற்குளம், பம்பைமடு, மடுகந்தை, மகாகச்சகொடி, நெடுங்கேணி, கனகராயன் குளம், ஓமந்தை உள்ளிட்ட பகுதிகளில் 782 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த நோயின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இது 25-30 வீதமான தாக்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் பொருத்தமான கிருமி நாசினிகளை பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-250)

# போதைப்பொருள் குற்றச்சாட்டில் இதுவரை 5000 மாணவர்கள் கைது

## சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் பயன்பாட்டு குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 5000 வரை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு பாடசாலை செல்லாத 600 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்தத் தொகையானது 2019 ஆம் ஆண்டாகும் போது 190 வரை குறைவடைந்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், சாதாரண தரம் மற்றும் உயர்தரம் கல்வி பயிலும் மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு 2000 ஆகக் காணப்பட்ட அந்தத் தொகையானது 2021 ஆம் ஆண்டாகும் போது, 5000 வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 16 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்கள் அதிகளவில் காணப்படுவதாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார்.

2015 ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் அதிகளவாக 30 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களே இருந்ததாகக் கூறிய அவர், தற்போது 22 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகளவில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

2020 ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில் 22 பட்டதாரிகளும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# இரு வேறு இடங்களில் இருவர் கசிப்புடன் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 6 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்லை வீதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பினை மறைத்து வைத்திருந்த ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 20 லீற்றர் கோடா மற்றும் 1.5 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு கைது நடவடிக்கைகளும் காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# விவசாயிகளுக்கு பாவனைக்கு உதவாத மருந்துகளை விற்றால் சட்ட நடவடிக்கை

## வடமாகாண பதில் விவசாய பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள், போலியான மற்றும் காலாவதியான மருந்துகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா தேவி சிறிரங்கன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாடு உட்பட வடமாகாணத்தில் அரசினால் தடை செய்யப்பட்ட விற்பன்னக்கு அனுமதி வழங்கப்படாத போலி பீடைநாசினிகள், பங்கசு நாசினிகள் மற்றும் திரவப் பசளைகள் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டவிரோத மற்றும் போலி விவசாய இரசாயனங்களை விவசாயிகள் பாவிப்பதனால் நெற்பயிர்ச் செய்கை உட்பட ஏனைய பயிர்ச்செய்கையில் நட்டம் ஏற்படுவதுடன் சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது.

இவ்வாறான விற்பனையாளர்களுக்கு எதிராக பீடைநாசினி 1980 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சட்டத் தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

# போலித்தாள்களின் புழக்கம் அதிகரிப்பு-பொலிஸார் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது போலித்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

இது பொதுமக்களின் கைகளில் சிக்குவதை தடுப்பது தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பண்டிகை நாட்களில் மக்களின் பாதுகாப்பிற்காகவும் சந்தேகநபர்களை கைது செய்யவும் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கிறிஸ்மஸ் ஆராதனைகள் நடைபெறும் ஒவ்வொரு தேவாலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# மரம் முறிந்து விழுந்ததில் பாடசாலை கூரை சேதம்

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக சீரற்ற காலநிலையினால் காற் றுடன் கூடிய மழையும் பெய்து வருகின்றது.

நேற்று முன்தினம் மாலை பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக தாண்டிக்குளம் பிரம ண்டு வித்தியாலயத்தின் வீதியோரமாக நின்ற மரமொன்று சரிந்து பாடசாலை கட்டடம் மேல் வீழ்ந்ததில் கட்டடத்தின் கூரைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் குறித்த பாதையுடனான போக்கு வரத்து முற்றாக ஸ்தம் பிதம் அடைந்துள்ளதுடன் மரத்தினை அகற்றும் பணியினை பொது மக்களின் உதவியுடன் அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள் பங்கிடுவதில் முறைகேடு
# ஒத்துழைப்புகள் இன்மையால் விசாரணைகள் மந்தகதியில்
### கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான கடந்த சிறுபோக செய்கையின்போது இடம்பெற்றதான முறைகேடுகளை விசாரணை செய்வதற்கு மாவட்ட அரச அதிபரால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுவின் விசாரணைகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒத்துழைப்பு வழங்காமையினால் விசாரணைகளை முழுமைப்படுத்த முடியாதுள்ளதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணை மடுக் குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன காணிகளில் முழுமையாக கடந்த சிறுபோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக குமரபுரம், கண்டாவளை பெரியகுளம், கோரக்கன்கட்டு ஆகிய பகுதிகளும் பரீட்சார்த்தமாக உள்வாங்கப்பட்டு சிறுபோக செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கோரக்கன்கட்டு பகுதியில் வறுமைக் கோட்டில் வாழும் விவசாயிகளுக்கு காணிகளை பங்கீடு செய்து வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும் இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் ஆகியோருக்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து மாவட்ட அரச அதிபரால் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) மற்றும் மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆகியோர் தலைமையில் விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டு மேற்படி விசாரணைக்குழுவினால் கடந்த ஜூலை மாதம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் பரந்தன் கமநல சேவை நிலையத்தில் வைத்து ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த முறைகேடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த போதும் இதுவரை விசாரணைகளுக்கு சமுகமளிக்காத நிலையில் விசாரணைகளை முழுமைப்படுத்த முடியாதுள்ளதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

## மருந்து மாறுபட்டதால் மருத்துவமனையில் பெண்

(கரணவாய்)

மாத்திரையினை மருந்தாளர் மாறி வழங்கியதன் காரணமாக பெண் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் குறித்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளார்.

அவருக்கு வழங்கப்பட்ட மாத்திரைகளை அவர் வீட்டுக்கு சென்று உட்கொண்ட நிலையில் வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக மீண்டும் மருத்துவமனை அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதன்போதே அவருக்கு மருத்துவரினால் சிபார்சு செய்யப்பட்ட மாத்திரையை விட வேறு மாத்திரையை மருந்தாளர் வழங்கியமை தெரிய வந்தது. (4-6-60)

## வைரவிழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் வைரவிழாவினை முன்னிட்டு நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டிகள் நாளை 24 மற்றும் 25 ஆம் திகதியில் நடைபெறவுள்ளன.

தனிநிலைப்போட்டிகள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் குழுநிலைப் போட்டிகள் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளன. வடக்கு மாகாண மட்டப் போட்டிகள் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர்கள் அன்றைய தினம் பொறுப்பாசிரியருடன் போட்டிக்கு சமுகமளித்தல் வேண்டும். போட்டிகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (4-6)

## நாவலர் தின நிகழ்வுகள்

(அராலி)


யாழ். வட்டு இந்துக் கல்லூரியும் சங்கானைக் கல்விக்கோட்டமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் இருநூறாவது ஜனனதின நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணியளவில், யாழ். வட்டு இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப்புலவர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைவராக கல்லூரியின் அதிபர் அ.ஆனந்தராசா, பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீமன் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-104)



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ் நாடு அரசின் உலகத் தமிழ்ச்சங்கம் மதுரையும் இணைந்து நடத்தும் தமிழ் வளர்ச்சியில் இலங்கை தமிழரின் பங்களிப்பு என்ற பொருளில் அமைந்த பன்னாட்டு கருத்தரங்கம் நேற்று மதுரையில் ஆரம்பமாகியது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற தொடக்க அமர்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் ப.அன்புச்செழியனிடம் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க வெளியீடான சங்கப்பேழை என்ற இதழ் வழங்கப்பட்டது. (படங்கள்- சிவசாந்தன்)

## ரோஹிஞ்ய அகதிகள் மீரிகான முகாமிற்கு மாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த ரோஹிஞ்ய அகதிகள் மீரிகான தடுப்பு முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 104 ரோஹிஞ்ய அகதிகள் மூன்று பேருந்துகள் மூலம் நேற்று வியாழக்கிழமை காலை நீர்கொழும்பு மீரிகான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சட்டத்துக்கு புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை சட்டத்துக்கு புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கும் எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் கடந்த 19 ஆம் திகதி 105 பேரையும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதவான் 104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா. ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அனுமதிபெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மீரிகான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார். அத்துடன், 104 பேரையும் கடத்த முயற்சித்தவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (4-6-33-104)

## வீதிக்கு அருகே வீழ்ந்த ஆலமரம்



(அராலி)

கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதான வீதிக்கு அருகாமையில் மிகப்பெரிய ஆலமரம் ஒன்று நேற்று அதிகாலை வீழ்ந்து முறிந்து பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. வளிமண்டலத்தில் ஏற்பட்ட தாழ் அமுக்கம் காரணமாக பெய்து வரும் மழை வீழ்ச்சி காரணமாக இந்த ஆலமரம் முறிந்து வீழ்ந்ததுடன் அங்கு இருந்த முச்சக்கரவண்டி ஒன்றும் சிறிய மண்டப கூடாரம் ஒன்றும் முற்றாக சேதமாகியுள்ளன. (4-6-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 220 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 150 |
| பச்சைமிளகாய் | 320 | 340 | 350 | 300 |
| தக்காளி | 180 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 | 160 |
| கோவா | 150 | 180 | 180 | 200 |
| கரட் | 200 | 320 | 350 | 400 |
| பூசணி | 100 | 110 | 100 | 160 |
| புடோல் | 200 | 150 | 180 | 180 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 800 | 500 | 650 | 900 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 450 | 450 | 800 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 420 | 380 | 400 | 480 |
| பீற்றூட் | 400 | 350 | 320 | 450 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 180 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 120 | 150 | 160 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 75 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 320 | -- | 320 |
| வெங்காயப்பூ | 600 | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 140 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 40 | 50 |
| ஈரப்பலா | 150 | 160 | -- | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும்...

பொது நிர்வாக அமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

25ஆம் திக்தி நத்தார் பண்டிகை இம்முறை விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை வருகின்றமையால் மறுநாள் திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## வன்முறைக்...

கொண்டதுடன், சொத்துக்களுக் கும் சேதம் விளைவித்து விட்டு தப்பி சென்றுள்ளது.

அச்சுவேலி தென்மூலை கைத்தொழில் பேட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் மோட்டார் சைக்கிள்களில் வந்து, வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று புகுந்து, வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியது.

சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7,33,104)

## காணாமல்...

நேற்று ஆண் ஒருவரது சடலம் கரையொதுங்கியது.

இதுகுறித்து மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாணம் பலாலி அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த 20ஆம் திகதி அன்று காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன கடற்றொழிலாளரை அப்பகுதி மக்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் அவர் நேற்று மாதகல் கடலில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (4-7,104)

## கழுத்தில் கத்தி...

விடுத்ததாக முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை காரைநகர் சாம்பல் ஓடை பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தொழிலாளி ஒருவர் கருவாடு உலர வைத்துக் கொண்டிருந்தவேளை அப்பகுதிக்கு வந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தொழிலாளியின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி சென்றுள்ளார்.

குறித்த சம்பவத்தினை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய உள்ளதாகவும் காரைநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (4-7)

## அரச ஊழியர்...

வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, 2021 நிதியாண்டில் இலாபம் ஈட்டிய வணிகக் கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பணியாளர்களுக்கு அதிகபட்ச வரம்பு 25,000 ரூபாயுக்கு உட்பட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவை செலுத்துமாறு திறைசேரி சுற்றறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2021 நிதியாண்டில் நட்டத்தைப் பதிவு செய்த வணிகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு, நிறுவனத்தின் லாபத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெறுவதற்கான உரிமை இல்லை என்று சுற்றறிக்கைகள் தெரிவிக்கின்றன. (4-7)

## பன்றிக்கு வைத்த...

செயலாளர் பிரிவிற்குட்பட்ட வேரவில் பகுதியில் குறித்த விலங்கு உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற வனலாகா திணைக்கள அதிகாரிகள் குறித்த விலங்கினை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7,100,316)

## நெருக்கடி...

நேற்று நுவரெலியா நகர மண்டபத்தில் இடம்பெற்ற, நுவரெலியா மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பான கலந்துரையாடலில், இவ்வாறு அழைப்பு விடுத்தார். நாட்டு மக்கள், கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்வு புரிகின்றது.

எனினும், தற்போதைய இக்கட்டான சூழ்நிலையை கடக்க வேண்டும்.

2023ஆம் ஆண்டில், மக்களுக்கு நிவாரணங்களை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தால், அடுத்த வருடம் உலகளவில் உணவு நெருக்கடி ஏற்படலாம். எனவே எமது உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தொடர வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை, அரசியலுக்கு அப்பால் செய்ய வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு, ஒருமித்த கருத்துக்கு அனைவரும் வரவேண்டும். இதைவிட மாற்றுவழி இல்லை.

நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பிறகு, அரசியல் செய்தது இல்லை. அனைவரையும் அழைத்து பேச்சு நடத்தினேன். ஒத்துழைப்பு கோரினேன். ஆனால், சிலர் பழைய முறையிலேயே அரசியல் நடத்த முற்படுகின்றனர். விமர்சனங்களை மட்டும் முன்வைக்கின்றனர்.

உரிய வேலைத் திட்டங்கள் இன்றி விமர்சிப்பதில் பயன் இல்லை. நாட்டு மக்கள் அரசை மட்டும் விமர்சிக்கவில்லை. முழு பாராளுமன்றத்தையும் விமர்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஜனாதி...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆகியோர் இடையில் சந்திப் பொன்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பினை ஒத்தி வைக்குமாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் கடிதம் ஊடாக ஜனாதிபதியிடம் கோரி இருந்தார்.

குறித்த கடிதத்திற்கு பதில் அளிக்கும் முகமாக சி.வி விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில், இந்த சந்திப்பு உத்தியோகபூர்வமற்றது. எதிர்காலத்தில், அடுத்த சந்திப்புகள் ஒழுங்கு படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு, தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப் பினர்களான சி.வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரை அழைக்காது, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சந்திப்பை ஒழுங்கு செய்ததாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7,33)

## மக்கள் பட்டினி...

ஒரு வேளை உணவு உண்ணாமல் பட்டினி கிடப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாகவே இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை நாட்டில் இவ்வளவு அழிவுகளுடன் கொண்டாட முடியாதுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## பாடசாலை...

கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இன்று முதல் எதிர வரும் முதலாம்திகதிவரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தவணையின், இரண்டாம் கட்டம், ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1432
வெற்றி இலக்கங்கள்
கன்னி 9 4 5 6 8 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1007
D 27 28 58 71
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.22
சீட்டிழுப்பு இலக்கம் 3219
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Y 04 16 63 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1325
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
I 26 26 28 29 39

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.22
சீட்டிழுப்பு இலக்கம் 286
மகரம் 05 18 20 57 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 4977
A 0 7 5 0 9 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1952
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.12.22
தினம் வியாழக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,345,800/-
N 25 53 54 73
8363 429

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.22
சீட்டிழுப்பு இல : 4113
வர்ணம் : சிவப்பு
ரூ. 3,944,860/-
வெற்றி இலக்கங்கள்
02 10 50 72 T

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,143,994.40
திகதி 2022-12-22
வெற்றி வாரம் 3664
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 16 17 29 51
கடகம்
ரூ. 8,978,860/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 33 25 28 36 37
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1128
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.12.22 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 288,113,315.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 555-
திகதி 2022-12-22
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 03 53 69
விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 15,292,764/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1778
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.12.22
ரூ. 4,054,060/-
வெற்றி இலக்கங்கள்
19 26 59 68 A


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# A/L 2022
மாணவர்களுக்கான...
## புவியியல் கருத்தரங்கு

கற்பித்தலில் 25 வருட அனுபவம் கொண்ட ஆசிரியர்

**N.BABU** BA Geo Spl


காலம் - டிசம்பர் 26,27,28,29 ஆம் திகதிகளில்
தினமும் காலை 8.30 தொடக்கம் 1 pm வரை)
இடம் - DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்)

புதிய, வெளி மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும். (C-5583)

TP : 077 936 5087

---

## ஏசியன் தளபாடம்
இன்று முதல் (23)
மலிவு விற்பனை (13872)



நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி.

077 358 3879

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-5587)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

---

## 12 இந்திய...

வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை வடக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் ஒரு ரோலர் படகில் வந்த 12 இந்திய மீனவர்களை கைது செய்து அவர்களை மயிலிட்டி துறைமுகம் கொண்டு சென்று யாழ். மாவட்ட நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை நீரியல்வள திணைக்களத்தினர் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (4,7,60)

---

# DCM - யாழ் நகர்
(யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

## A/L 2022 கருத்தரங்கு
**தமிழ்** யாழ். பிரபல ஆசிரியர்

நாளை 24.12.2022 மு.ப 12.00 - 5.00 மணி
(20 மணித்தியாலம்)

077 011 9434 (13874) நிர்வாகம்

---

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது.
தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல.

077 706 7698 (C-5571)

---

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
# TECHNO WORLD
தொழில்நுட்ப கல்லூரி

A/L 2022 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து பிரிவு மாணவர்களுக்குரிய

## விசேட செயலமர்வு

26,27,28 December 2022 — ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல்

'காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை'

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். (C-5582)

077 017 5346

---

## வணிகக்கல்வி கருத்தரங்கு
### 2022 A/L

ஆரம்பம்: 24.12.2022
சனிக்கிழமை 8.00 a.m முதல்

**DMI Commerce Block**
*Stanley Road Jaffna*

புதிய மாணவர்களும் இணைய முடியும்

- பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள்
- புள்ளித் திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- 10 அமர்வுகள் இடம்பெறும்

ஊடாகவும் இடம்பெறும் (13876)

077 206 8760 — T.S.Richi BBA(Hons), HRM(Spl), PGDE

---

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரப் பகுதியில் A9 வீதியில் இருந்து 30 மீற்றர் தூரத்தில் ஸ்ரேசன் வீதியில் இலங்கை வங்கிக்கு மேற்கு புறமாக நல்ல தண்ணீர் கிணற்றுடன் சுற்றி வர மதிலுடன் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. கடைகள், வீடுகள், தனியார் வைத்தியசாலைகள், மண்டபம் கட்ட உகந்த இடம்.
தரகர்கள் தேவையில்லை. (13866)

076 005 2296, 077 670 1521
077 416 2296

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நவக்கிரிப் பகுதியில் வீட்டுடன் கூடிய 6 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (13843)

077 327 6363

---

பயிற்சியுடன் உடனடி
## வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-5587)

V2 TRAVELS

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

---

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்

- சிட்டை எழுதுனர்
- வரவேற்பாளர்
- காசாளர்
- பைக்கிங் செய்பவர்

உடன் தேவை.
தொடர்புகளுக்கு (13879)

076 659 5578

---

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள கூலியாட்கள் (labour) தேவை. (C-5588)

077 944 8109
076 760 0403

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

**ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்**

தரகர் தேவையில்லை (13878)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 814 7389, 077 986 5457

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 82 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (13878)

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457, 077 814 7389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.